மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன் தனியார் பள்ளி களுடைய சம்மதத்தின்பேரில் அரசாங்கப் பள்ளிக்கு மாற்றமாகி வருவார்களானால் அவர்களுடைய முந்திய பணி கணக்கிலேன் எடுத்துக் கொள்ளப்படுகிறது. தனியார் பள்ளிகளிலிருந்து அவர்க விலக்கப் பட்டாலோ, அல்லது அவர்கள் ராஜிநாமா செய்து விட்டு வந்தாலோ அந்தப் பணிக்காலத்தைச் சேர்த்துக் கொள்வதில்லை. தனியார் பள்ளிகளின் ஒப்புதலோடு வருகிறவர்களுக்கு, அந்தப் பணிக்காலத்தையும் சேர்த்துக் கொள்வதற்கு இப்போது விதிகள் இருக்கின்றன.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, ஏ விங்

. ப.
30. பி விங் என்று இருக்கிற இரண்டு பிரிவையும் ஒருங்கிணைப்பதற்கு ஏதாவது காலகெடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் எத்தனை வருஷங்களில் இவை இரண்டும் ஒருங்கிணைக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கு ஒன்றும் காலக்கெடு வைக்கவில்லை. சொல்லப்பட்டிருக்கிற கணக்குப்படி பார்த்தால், இவை இரண்டும் ஒருங்கிணைக்கப்படுவதற்கு பத்துப்பனிரெண்டு ஆண்டுகள் ஆகலாம். இந்த இரண்டு பிரிவு ஆசிரியர்களிலும் சிலர் உடனடியாக ஒருங்கிணைக்க வேண்டும் என்கிறார்கள். சிலர் கூடாது என்கிறார்கள். ஆகவே இந்த இரண்டு பிரிவினரும் சேர்ந்து உட்கார்ந்து ஆதியில் சர்வீசில் சேர்ந்த தேதிப்படி சீனியாரிடி அமைத்துக் கொள்ள ஒருமித்த கருத்துக்கு வருவார்களானால் அரசாங்கத்தைப் பொறுத்தவரை அந்த இரண்டு பிரிவுகளையும் உடனடியாக ஒருங்கிணைத்துவிடுவதில் ஆட்சேபணை இல்லை. அதை அந்த ஆசிரியர்களிடமும் சொல்லியிருக்கிறோம். இதனால் அரசாங்கத்திற்குச்சில சங்கடங்கள் கூடக் குறையும்.

Books on elective subjects in Telugu.

*** 85 *Q*.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :**

(*a*) whether the Government have made any arrangements for publishing Text Books for Elective subjects in Telugu for the use of Telugu students in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தெலுங்கு மொழியில் விருப்பப்பாடங்களை (10, 11 வகுப்புகளில்) பயில்வோர் எண்ணிக்கை மிகக் குறைவே. அவர்களுக்கு அப்பாடங்களுக்கான பாடங்கள் தெலுங்கு மொழியில் கிடைக்கச் செய்வதற்கான வழிவகைகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன, செய்தபின், தற்போதைக்கு எந்த நடவடிக்கையும் எடுக்க இயலாது என்று தெரிகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, for want of text-books for electives in Telugu there is no uniform teaching in schools. There are 15 or 16 schools in Hosur and Denkanikotta taluks and each teacher

is following his own way. Some are teaching in English and some others are teaching in Telugu. The medium of instruction is Telugu. The number of failures in electives is increasing and I represented the matter to the Hon. Minister one year ago. So may I know whether the Government will take steps to see that books are printed at least this year and boys are helped ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இங்கே 77 மாணவர்கள், 95 மாணவர்கள், 136 மாணவர்கள் என்று எலெக்டிவ்ஸ் எடுத்துப் படிக்கிறார்கள். இவர்களுக்கு என்று புத்தகம் அச்சிடுவது என்றால் அது கட்டுப்படியாகக் கூடியதாக இருக்காது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவேதான் ஆந்திரா மாநிலத்தில் விருப்பப் பாடங்களுக்கு என்று அங்கே என்ன புத்தகங்கள் வைத்திருக்கிறார்களோ அந்தப் புத்தகங்களையே இங்கும் வைக்கலாமா என்பது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Andhra Government have not produced books in this subject and therefore we are not able to get any text-books from that area. Even though the number is small, in the interest of the boys, will the Government take up this work and help the boys ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆந்திர மாநிலத்தில் வெளியிடப்படுகிற புத்தகங்களைப் பரிசீலனை செய்து பார்த்து நமக்குத் தேவையான புத்தகங்கள் கிடைக்கவில்லை என்ற நிலைமை ஏற்படுமானால் வேறு எந்த வகையில் அது ஈடு செய்யப்படலாம் என்பதுபற்றி ஆராயப் படும்.

THIRU B. VENKATASWAMY : Sir, even though the number is small, the boys suffer a lot for want of Telugu books. No book from the Andhra Government is available. So, may I know whether a separate Committee would be formed for this purpose and whether the Government would do something about it ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே அங்கே கிடைக்கலாம் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. கிடைக்கவில்லை என்றால் வேறு எந்த வகையில் ஈடு செய்துகொள்ளலாம் என்பதுபற்றி ஆராயப்படும். தமிழ்நாடு புத்தக வளர்ச்சி கழகத்தோடு கலந்து கல்வித்துறையினர் இதுபற்றி ஒரு முடிவு எடுப்பார்கள்.

திரு கா. வேழவேந்தன் : இந்த நிலைமைக்கு மாறாக தமிழக எல்லையோரப் பகுதியில் உள்ளவர்கள் எல்லாம் வேலைவாய்ப்பை நாடி தமிழ் எடுத்துப் படித்து வருகிறார்கள். இதனால் தெலுங்கு ஆசிரியர்களுக்கு வேலை இல்லாத நிலை ஏற்படுகிறது. ஆகவே இருக்கிற நிலைமைக்கேற்ப தெலுங்கு ஆசிரியர்கள் தமிழ் பயின்று தமிழ் சொல்லிக் கொடுக்க முன் வந்தால் அவர்களுக்குத் தக்க பயிற்சி அளித்து அதற்கான வழிவகைகளை ஏற்படுத்த அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று அவர்களிடம் இருந்து விண்ணப்பம் வந்தால் கல்வித்துறை இதுபற்றி ஆராயும்.

(திரு நா. வீராசாமி தலைமை)

Advisory Committee for Eye Camp Fund.

* 86*Q*.— THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state the details of the compostion of the panel set up to administer the 'Eye Camp Fund' in this State ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் "முதல்வர் கண் சிகிச்சை முகாம் நிதி"யைப் பராமரிக்க ஆலோசனைக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. அவ்வாலோசனைக் குழுவிலிருக்கும் அரசு அலுவலர்கள் மற்றும் அரசு சார்பற்றவகள் பின்வருமாறு :—

1 மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்—தலைவர்.

2 திரு எம். ஏ. எம். ராமசாமி, ஷெரீப், சென்னை—உறுப்பினர்.

3 திரு எஸ். முத்து, மதுரை நகரத் தந்தை—உறுப்பினர்.

4 திரு என். மகாலிங்கம், தொழிலதிபர், பொள்ளாச்சி—உறுப்பினர்.

5 திரு ஏ. ஆர். ராமசாமி, கும்பகோணம்—உறுப்பினர்.

6 செயலர் மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத்துறை—உறுப்பினர்.
7 இயக்குநர், மருத்துவக் கல்வித்துறை—உறுப்பினர்.

8 இயக்குநர், மக்கள் நல்வாழ்வு, குடும்பநலத்துறை—உறுப்பினர்.

9 துணைச் செயலாளர், நிதித்துறை,—உறுப்பினரும் பொருளாளரும்.

10 துணைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு, குடும்பநலத்துறை, செயலர்—உறுப்பினர்.

திரு வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, கண் ஒளி பெற வேண்டியவர்கள் தமிழகத்தில் பத்து லட்சம் பேர் இருக்கிறார்கள் என்பது வரையறுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு எல்லாம் கண்ணொளி வழங்குகிற திட்டம் எத்தனை ஆண்டுகளில் இந்த அரசினால் பூர்த்தி செய்யப்படும்? இதற்கு ஏராளமாகச் செலவாவதனால் மத்திய சர்க்காரிடம் இருந்தும் இதற்கான உதவியைப் பெற நமது அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?